# திருவண்டப்பகுதியும் காலச்சக்கரமும் - ஓர் ஒப்பாய்வு

**ரா.ரேவதி & முனைவர் கோ.ப.நல்லசிவம்,**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010.
அலைபேசி - 98403 07644
மின்னஞ்சல் - revathiraj85@gmail.com, gpnsivam@gmail.com

22

**ஆய்வுச் சுருக்கம்**

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்க முலக மாதலின்
இருதிணை யைம்பா லியனெறி வாழாமல்[1]
றிரிவில் சொல்லோடு தழாஅல் வேண்டும்"[1]

"வானையளப்போம் கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்"[2]

இவ்வாறு தொல்காப்பியம் முதல் பாரதியின் கவிதைகள் வரை தமிழ் இலக்கியங்களில் தொன்று தொட்டு அறிவியல் சிந்தனைகளும் செய்திகளும் பரவி இருப்பதை நாம் காணமுடிகிறது. அதிலும் குறிப்பாக, பக்தி இலக்கியங்களில் உள்ள அறிவியல் சிந்தனைகள் என்பது மனிதனையும் அவனது வாழ்க்கை நெறியையும் பண்படுத்தும் விதமாக அமைந்து உள்ளதை நாம் அன்றாட வாழ்வில் உணர்ந்து வருகிறோம்.

**எடுத்துக்காட்டாக** சிவன் ராத்திரி அன்று கண் விழிப்பதும், மார்கழி மாதம் பிரம்ம முகூர்த்த நேரத்தில் அதிகாலை எழுந்து கோலமிடுவதும் என - இது போன்று ஆன்மிகமும் அறிவியலும் மனித வாழ்வில் இணைந்தே இன்று வரை பயணித்து கொண்டே வருவதை நம்மால் காணமுடிகிறது. சூரியன் மறையும் பொழுது இருள் சூழ்ந்து விடுகிறது. அது போல் மனிதனிடம் இறைவன் பற்றிய ஞானஒளி இல்லாத பொழுது அவனை அஞ்ஞானம் சூழ்ந்து கொள்கிறது. எனவே மனிதன் ஞான ஒளியினைத் தொடர்ந்து பெற்று தனது வாழ்வினை நெறிப்படுத்திக் கொள்ள நாயன்மார்களும்,ஆழ்வார்களும், சித்தர்களும், மகான்களும் யுகம் தோறும் தோன்றி மக்களை நல்வழிப்படுத்துகின்றனர். இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை என்பதை அறிந்த நம் சான்றோர்கள் மனித வாழ்விற்குத் தேவையான பக்தியையும் மற்றும் அறிவியல் சிந்தனைகளையும் பண்களாகவும், பதிகங்களாகவும்,கவிதைகளாகவும் மக்களிடம் கொண்டு சேர்த்தனர்.

இதன் அடிப்படையிலேயே பக்தியும் அறிவியலும் விரவிக் காணப்படும் பக்தி இலக்கியமான சைவத் திருமுறைகளில் எட்டாம் திருமுறை என்று அழைக்கப்படும் திருவாசகத்தின் திருவண்டப்

பகுதியும் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் உள்ள காலச்சக்கரம் என்ற இவ்விரண்டு திருமுறைகளில் உள்ள வானியல் கூறுகள் பற்றிய சில கருத்துக்களைக் கட்டுரை ஆராய முனைகிறது.

**திறவுச்சொற்கள்**

சிவபெருமான்,ஆற்றல்,பேரண்டம்,பிரபஞ்சம்,கோள்கள்,சூரியன்,சந்திரன்,
பஞ்சபூதங்கள்,நிலம்,நீர்,காற்று.

**முன்னுரை**

ஒவ்வொரு நாளும் இந்த உலகில் எண்ணற்ற உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் நடந்து கொண்டே இருக்கிறது. அதில் சில உயிர்களே மனிதப் பிறப்பு எடுக்கிறது. அதிலும் மிகச் சில மனித பிறப்பே, உலகில் உள்ள மனித இனம் உய்யும் பொருட்டும், உவப்பும் பொருட்டும் செயற்கரிய செயல்களைச் செய்கிறது. இது இரண்டு வகையாகப் பிரிந்து உள்ளது.அவை அகம் மற்றும் புறம். மனித இனம் அகநோக்கில் ஆனந்தமாக இருக்க ஆன்மிகமும், புறத்தில் மகிழ்ச்சியாக இருக்க அறிவியலும் என இரண்டும் இரு கண்கள் போல் உலகில் சேர்ந்தே பயணிக்கின்றன. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. தாம் உணர்ந்த ஒன்றை உலக மக்கள் புரிந்து பயன்பெற தம்முடைய தாய்மொழி வழியே எடுத்துரைப்பது சாலச் சிறந்தது. அவ்வாறு நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் காலம் தோறும் பல ரிஷிகளும், சித்தர்களும், மகான்களும் தோன்றி மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் பொருட்டு, பல ஆன்மிகக் கருத்துக்களை அறிவியல் சிந்தனையோடு எடுத்துரைக்கின்றனர். சங்க இலக்கிய நூல்கள்,அகத்தியம்,தொல்காப்பியம், பதினெண்மேற்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என அனைத்திலும் அறிவியல் தொடர்பான பன்முகச் செய்திகள் பரவி இருப்பதை நம்மால் காண முடிகிறது. நம் முன்னோர்கள் அறிவியலின் அடிப்படையிலேயே ஆலயங்களையும், சிலைகளையும்,வழிபாட்டு முறைகளையும், பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்தி உள்ளனர். அறிவியல் என்று பெயரிடப்படாத அந்த காலகட்டங்களிலேயே தொலைநோக்குப் பார்வையுடன் எல்லாச் செயல்களையும் அறிவியலின் பார்வையில் அமைத்துள்ளனர்.

**திருவாசகச் சிறப்பு**

கடவுளை நேரில் கண்டு மகிழ்ந்து அக்கடவுளோடு பெற்ற அனுபவங்களை எடுத்துச் சொல்லியும் பாடியும் தொகுக்கப்பட்ட நூல் தமிழில் உள்ள தெய்வீக இலக்கிய நூல் இந்நூல் பன்னிரு திருமுறைகளில் "எட்டாவதாக" அமைந்த திருமுறையாகும்."திரு+வாசகம் திருவாசகம்" திரு என்பது எப்பொழுதும் ஒரே மனநிலையுடன் கூடிய உள்ளத்தின் நிறைவையும் முக்தியையும் குறிக்கும். வாசகம் என்பது அந்த நிறைவே உடைய பெரியோரின் திருவாயிலிருந்து வெளிப்படும் ஆற்றல் மிக்க சொற்களைக் குறிக்கும். அச்சொற்களால் அமைந்த இந்நூலில் "51 தலைப்புகளையும் 658 பாடல்களையும்"[3] உடையது.

**திருவண்டப் பகுதி**

திருவாசகத்தின் மூன்றாவது பதிகமாக திருவண்டப் பகுதி அமைந்துள்ளது.அண்டப் பகுதி என்பது விரியும் அண்டம் என்றும்,நம் உலகம் உட்பட பல கோள்களையும் கொண்ட ஒரு பெரும் கோளத்தைக் குறிக்கும். தூலம் என்பது கண்களால் காணக்கூடிய பெரிய மற்றும் சிறியனவாக உள்ள பொருட்களாகும். சூக்குமம் என்பது கண்களால் காண முடியாத பொருட்களாக உள்ளது. உயிர்கள் உய்யும் பொருட்டு சிவபெருமான் படைத்தருளி உள்ள எண்ணற்ற பொருட்களின் அமைப்பை வியந்து பாராட்டும் பகுதியாக இப்பதிகம் உள்ளது.

**திருவண்டப் பகுதியும் வானியலும்**

" அண்டப் பகுதியில் உண்டைப் பிறக்கம்,
அளப்பரும் தன்மை, வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றஎழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன;
இல்நுழை கதிரின் துண்அணுப் புரையச்"[4]

இவ்வரிகளின் மூலம் பஞ்சபூதங்களாகிய நிலம்,நீர்,காற்று நெருப்பு,விண் ஆகிய ஐந்தின் கூட்டையும் உள்ளடக்கியதே பேரண்டம். இத்தகைய பேரண்டத்தினை அளப்பது அறிய செயல்.இதன் அழகினை வெறும் வார்த்தைகளால் கூற இயலாது என்றும் பேரண்ட பிரபஞ்சத்தின் அழகினை வர்ணிக்கின்றார். நூறு கோடிக்கும் மேலாக பறந்து விரிந்து இருக்கிற பேரண்ட பெரு வெளியை மாணிக்கவாசகப் பெருமான் இவ்வனைத்திற்கும் பெரியோனாக விளங்கும் சிவபெருமானே அவ்வாறு காட்சி அளிப்பதாக கூறுகிறார்.

"அருக்கனிற் சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன்; திண்டிறல்
தீயில் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானிற்கலப்பு வைத்தோன்: மேதகு
காலின் ஊக்கங் கண்டோன்; நிழல் திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிபட
மண்ணில் திண்மை வைத்தோன்; என்றென்று"[5]

ஒளிபொருந்திய சூரியனைப் போன்றும், சந்திரனின் இயல்புத்தன்மையான குளிர்ச்சியைப் போன்றும், நெருப்பைச் சூட்டையும், வானில் கலந்திருக்கும் காற்றின் தன்மையாகிய வேகத்தினைப் போன்றும்,தண்ணீரின் குணமாகிய சுவை மற்றும் எல்லாமாக மாறக்கூடிய வடிவத்தினை உடைய தன்மை போன்று,மண்ணின் நிலைப்புத் தன்மை மற்றும் இருப்பு நிலை இவ்வாறு அனைத்துமாக சிவபெருமான் வியாபித்துள்ளார். இவை அனைத்தும் எத்தனை பல கோடி தன்மை உடையதாக இருப்பினும் அத்தனை பல கோடி பொருட்களுக்குள்ளும் பொருந்துமாறு அனைத்தையும் படைத்துள்ளார். இப்பாடலின் மூலம் கோள்களின் தன்மையும்,பஞ்சபூதங்களில் காற்று, நெருப்பு,நீர் மற்றும் நிலம் இவற்றின் தன்மைப் பற்றி அறிந்து கொள்ளுமாறு மாணிக்கவாசகர் விளக்கியுள்ளார்.

"இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலோடு கீழாய் விரிந்தோன் காண்க"[6]

அறிவியல் சிந்தனையாளர்கள் பொதுவாக, பிரபஞ்சம் துகள்களால் நிரம்பியுள்ளது என்றும்,அவை அனைத்தும் நுண்ணிய துகள்கள் என்றும், பல நுண்ணிய துகள்களின் கூட்டே கோள்கள், பஞ்ச பூதங்கள், மற்றும் உயிரினங்கள் என்று விஞ்ஞானரீதியில் கூறுகின்றனர். இதனையே மாணிக்கவாசகப் பெருமான் அரிய பொருட்களில் மிகவும் அரியவன் என்றும், பிரபஞ்ச முதல் எல்லா பொருட்களிலும் ஊடுருவி நிற்பவன்.அறிவாலும் உணர்வாலும் உணரக்கூடியவன் என்றும், மேல் நோக்கிய விண்ணாகிலும், கீழ் நோக்கிய மண்ணாகிலும் அவனே எல்லா இடத்திலும், எல்லா பொருட்களிலும் வியாபித்து இருக்கிறான் என தானும் உணர்ந்து, மக்களுக்கு தம் பதிகங்களின் மூலம் உணர்த்துகிறார்.

"அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செய்வதும் ஆனோன் காண்க
கற்பகமும் இறுதியும் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க"[7]

நாம் வாழும் இந்த பூமி முழுவதும் ஓர் அசைவற்ற ஆற்றல் நிறைந்து உள்ளது.அதுவே சிவம் எனப்படும். இவ்வாற்றல் அசைவற்ற பிரபஞ்சம் முதல் அசையும் உயிரினங்கள் வரை நிலை ஆற்றல் ஆகவும், இயக்க ஆற்றல் ஆகவும் ஒவ்வொன்றிற்குள்ளும் இருந்து செயல்படுகிறது. இதனையே முதலும் முடிவும் என இரண்டிலும் இருப்பவன் சிவனே என்றும் ,எல்லா யுகங்களின் முதலையும் முடிவையும் கண்டவன் அவனே என்றும், அந்தந்த உயிரினங்களின் எண்ணமாக இருந்து செயல்படும் தலைவன் என்றும் கூறுகிறார்.இதனை நாம் அறிவியல் நோக்கில் காணும் பொழுது பிறக்கும் ஒவ்வொரு உயிரும் கோள்கள் மற்றும் பஞ்சபூதங்களோடு ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அதிலிருந்து நொடிதோறும் தோன்றும் இயற்கை அதிர்வுகளுக்கு ஏற்ப வாழ்ந்து பின்பு மீண்டும் மண்ணுடன் கலந்து விடுவதாகக் கூறுகின்றார்.

**திருமந்திரம் ஓர் அறிமுகம்**

திரு+மந்திரம் = திருமந்திரம் " மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது என்பதாகும்.மனம்,வாக்கு, மெய் இம்மூன்றும் ஒன்றிய நிலையில், ஒன்றையே எண்ணி இருத்தல் என்பது ஆகும். ஒவ்வொரு பாடலும் மனிதனை உயிர்ப்பிக்க கூடிய அழியாத செல்வத்தை (திரு) கொடுக்கக் கூடியது" என்பது நூற்பெயராலேயே அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு மந்திரம் என்று 3000 மந்திரங்களை அளித்துள்ளார். இம்மந்திரங்கள் முறையே ஒன்பது தந்திரங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளில் "பத்தாவது"[8] திருமுறையாகத் திருமந்திரம் உள்ளது.

**காலச்சக்கரம்**

திருமந்திரத்தின் மூன்றாவது தந்திரத்தில் பதினான்காவது தலைப்பாகக் காலச்சக்கரம் அமைந்துள்ளது. சக்கரம் என்பது சுழற்சியைக் குறிக்கும் சூரியன் மற்றும் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு காலமும் நிர்ணயிக்கப்படுகிறது.இதன் அடிப்படையிலேயே தோன்றும் உயிரினங்களின் பிறப்பும் இறப்பும் தோன்றி மறைகிறது. இவ்வாறாக மனித பிறப்பு எடுக்கும் எந்த ஒரு உயிரும் தனது வாழ்வில் நடைமுறைகளை இறைவழியுடன் அமைத்துக் கொள்ள வேண்டும் என யோகத்தின் வாயிலாக நமக்கெல்லாம் திருமூலர் உணர்த்துகிறார்.

"அழிகின்ற ஆண்டவை ஐயைஞ்சு மூன்று
மொழிகின்ற முப்பத்து மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் டென்ப
தெழுகின்ற ஈரைம்ப தெண்ணற் றிருந்தே"[9]

வரிகளின் மூலம் மனித பிறப்பின் வாழும் நாட்களை கணக்கிட்டுக் காட்டுகிறார்.ஒரு மனிதனின் முழு ஆயுட்காலம் என்பது கண்டங்களாக உள்ளது.அவை 25 ஆண்டு முதல் 28 வரை ஒரு எல்லை. 30 முதல் 33 வரை ஒரு எல்லை.60 முதல் 62 வரை ஒரு எல்லை மற்றும் நூற்றாண்டுக்கு ஒரு எல்லை எனவும், கோள்களின் சுழற்சி மூலம் மனித வாழ்வின் ஆயுட்காலம் அமைகிறது.ஒரு மனிதனின் ஆயுட்காலம் என்பது "120 ஆண்டுகள்"[10]ஆகும். இதனை ஒன்பது கோள்களின் முழுசுழற்சி என்பது 120ஆண்டாகக் கணக்கிடப்பட்டு நான்கு கண்டங்களாக அமைந்துள்ளன. இப்பாடலின் மூலம் ஒன்பது கோள்களும் முழுமையாக சுழன்று வர 120 ஆண்டுகள் ஆகிறது என்பது தெரிய வருகிறது. திருமூலர் அன்றே இதைக் கணக்கிட்டு காட்டியுள்ளார்.

"திருந்து தினம்அத் தினத்தி னொடுநின்று
இருந்தறி நாளொன் இரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந்து ஓங்கி
வருந்துதல் இன்றி மனைபுக லாமே"[11]

ஒரு மனிதன் பிறந்த நட்சத்திரத்தில் இருந்து ஐந்தாவது நட்சத்திரம், ஏழாவது நட்சத்திரம், பத்தாவது நட்சத்திரம், பதினாங்காவது நட்சத்திரம், பத்தொன்பதாவது நட்சத்திரம், இருபத்து இரண்டாவது நட்சத்திரம், இருபத்து ஏழாவது நட்சத்திரம் என இவைகள் யோகப் பயிற்சிகள் தொடங்க உகந்த நாள் அல்ல. ஏனென்றால் இவை அனைத்தும் அனுஜென்ம திரி ஜென்ம நட்சத்திரங்கள் ஆகும். இவை அனைத்தும் ஒரே கிரகத்துக்குரிய நட்சத்திரங்கள் என்பதால் அந்த நாட்களில் புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. இப்பாடலின் மூலம் ஒவ்வொரு கிரகங்கத்திற்கும் ஒரு நட்சத்திர அமைப்பு இருப்பதைப் பற்றிய ஜோதிட அறிவியல் பற்றிய கருத்துக்களை விளக்கியுள்ளார்.

" ஓவிய மான உணர்வை அறிமின்கள்
பாவிகள் இத்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டிலம் மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே"[12]

இப்பாடலின் மூலம் உணர்வது யாதெனில், எந்த ஒரு மனிதன் யோகத்தின் அடிப்படையில் நின்று சுழுமுனை என்னும் நடுநாடியில் பிராணாயாம உதவியுடன் உச்சந்தலையில் அவனது நினைவுகளை வைத்து.எண்ணத்தை ஒரு நிலைப்படுத்துகின்றானோ அவனே சூரியன், சந்திரன், அக்னி என்று கூறப்படும் மும்மண்டலத்தின் ஒளியை காண்கிறான்.இதன் மூலம் கோள்கள் ஒளி பொருந்தியது என்றும், அதில் இருந்து கதிர்வீச்சுகள் நம்மிடம் வந்து சேர்ந்து கொண்டே இருக்கிறது என்றும் நம்மால் அறிய முடிகிறது.

"அவனிவன் ஆகும் பரிசறி வாரில்லை
அவனிவன் ஆகும் பரிசது கேள்நீ
அவனிவன் ஓசை ஒளியினுள் ஒன்றிடும்
அவனிவன் வட்டம் அதுவாகி நின்றானே "[13]

இப்பாடலின் மூலம் காலம்,சூக்குமம்,ஆகாயம்,சந்திர மண்டலம் என அனைத்தின் நிலை பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. சைவ சித்தாந்தத்தில் உள்ள சுத்தமாயை என்னும் தத்துவத்தின் அடிப்படையில் நிலை ஆற்றல் என்னும் சிவமாகிய பிரபஞ்சம் இயக்க ஆற்றல் என்று கூறப்படும் சக்தியின் துணையுடன் ஒவ்வொரு ஜீவனிடத்தும் அறிவாகவும் உணர்வாகவும் இருந்து அந்த ஜீவனை வழிநடத்துகிறார் என்கிறார் திருமூலர்.

**முடிவுரை:-**

" யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம்"[14] என்னும் திருமூலரின் வாக்கிற்கு இணங்க, நமது முன்னோர்கள் அவர்கள் உணர்ந்த அறிவையும், அனைத்துச் செய்திகளையும், ஆன்மிகத்தோடு அறிவியலையும் இணைத்தே நாம் வாழ்வில் எளிதாகக் கடைபிடிக்கும் வண்ணம் நமக்கு அளித்துள்ளனர். மனிதனின் முதல் விருப்பமும் தேவையும் ஆரோக்கியமாக நீண்ட நாள் வாழ்வது என்பது அதனை அண்டத்தில் உள்ள ஒலிகளை பிண்டத்தில் உணர்ந்தால் பிராணனுக்கு கேடு இல்லை நீண்ட ஆயுளை பெறலாம், பெரிதாக அறிவியல் உபகரணங்கள் இல்லாத காலகட்டத்திலேயே விஞ்ஞானிகளும் முன்னோர்களும் இயற்கையோடும் பக்தியோடும் அறிவியலை ஒரு துணையாக கொண்டு நமக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியுள்ளனர் எனவே அறிவியலுக்காக தமிழும், தமிழர்களுக்காக அறிவியலும் எழுத்து, சொல்,பொருள் என்ற மூன்றின் பரிமாணத்தில் காலம் தோறும் வளர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**மேற்கோள்கள்**

1). அடிகளாசிரியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, ப-217.
2) பாரதியார், ta.m.wikisource.org. புதிய ஆத்திச்சூடி.
3) கு.வைத்தியநாதன்,திருமுறைகளில் சைவ சித்தாந்தம், ப-126.
4) மாணிக்கவாசக சுவாமிகள், திருவாசகம், ப- 21.
5) புலியூர்க்கேசிகன்,திருவாசகம்,ப36.

6) வ.சிவசங்கரன், திருவாசகம்,ப-42.

7)மேலது, ப-42.

8) சிவமல்லிகா,திருமந்திரமும்-வேதாத்திரியமும்,ப-10.

9) பத்தாம் திருமுறை,திருமந்திரம், ப-124.

10) பொத்தேரி ஸ்ரீராமய்யங்கார் மற்றும் கீழாத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர் குடும்ப ஜோதிடம்,ப-28.

11) மணிவாசகன்,திருமந்திரம், ப-265

12)மேலது,ப-265.

13)மேலுது,ப-268.

14)மேலது, ப-273.

**துணைநூற்பட்டியல்**

1) அடிகளாசிரியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், முதற்பதிப்பு - 2008.

2) பாரதியார், புதிய ஆத்திச்சூடி, ta.m.wikisource.org.

3) வைத்தியநாதன்.கு,திருமுறைகளில் சைவ சித்தாந்தம், ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி அச்சகம்,திருவாவடுதுறை.

4) மாணிக்கவாசக சுவாமிகள், திருவாசகம், பரிசுப் பதிப்பு சகுந்தலை நிலையம் சென்னை. முதற்பதிப்பு - 2014.

5) புலியூர்க்கேசிகன்,திருவாசகம், மணிவாசகர் பதிப்பகம் சென்னை. முதற்பதிப்பு - 2011.

6) சிவசங்கரன்.வ, திருவாசகம்,மணிவாசகர் பதிப்பகம் சென்னை. முதற்பதிப்பு - 2006.

7) சிவமல்லிகா,திருமந்திரம் வேதாத்திரியமும், ஸ்ரீ திருமலை பிரிண்டர்ஸ் திருச்சி, முதற்பதிப்பு - 2009.

8) பத்தாம் திருமுறை,திருமந்திரம், பிரேமா பிரசுரம் சென்னை.முதற்பதிப்பு - 2009.

9) பொத்தேரி ஸ்ரீராமய்யங்கார் மற்றும் கீழத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாரியர் குடும்ப ஜோதிடம், லிப்கோ பப்ளிகேஷன் ( பி) லிமிட் சென்னை. முதற்திப்பு - 1978.

10) மணிவாசகன்,திருமந்திரம்,ராமையா பதிப்பகம் சென்னை. முதற்பதிப்பு - 2010.